//மின்னஞ்சலில்//

தமிழ்நாடுபள்ளிக்கல்விஇணைஇயக்குநரின் (பணியாளர்தொகுதி) செயல்முறைகள்

சென்னை – 600 006

ப.மு.எண்.12053/ அ4 / இ3 / 2020, நாள்.19 .03.2020.

''''''

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக் கல்வித்துறை – உதவியாளர் நேரடி நியமனம் – (Group–II A Services) (Non – Interview posts) – 2013–2014ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட உதவியாளர்களுக்குப் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை:

1. அரசாணை (4டி) எண்.18, பள்ளிக் கல்வித்[ப.க. 4(2)] துறை, நாள்..28.10.2013.
2. அரசாணை (4டி) எண்.353, பள்ளிக் கல்வித்[ப.க. 4(2)] துறை, நாள். 17.12.2013.
3. அரசாணை (நிலை) எண்.34, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (பி) துறை, நாள்.15.04.2015.
4. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3, கடிதம் ந.க.எண். 1789/PSD–G/2015, நாள். 27.02.2015 மற்றும் 29.10.2015.
5. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.9825/அ4/இ3/2013, நாள். 21.03.2005 மற்றும் 19.12.2015.
6. சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்.

====

2013–2014ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் உதவியாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் (Group–II A Services) (Non –Interview posts) தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பார்வை (4)ல் கண்ட கடிதம் மூலம் பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (5)ன் அடிப்படையில் ஆணை வழங்கப்பட்டது.

அவ்வாறு தமிழ்நாடு அமைச்சுப் பணியில் வகை 12–ன் கீழ் உள்ள உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்ட கீழ்க்கண்ட பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்யக் கோரி பார்வை (6)ன்வாயிலாகஉரிய கருத்துருக்கள் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களின் பரிந்துரையுடன்பெறப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கீழ்க்காண் உதவியாளர்களுக்கு அவர்களது பெயருக்கெதிரில் கலம் (4)ல் குறிப்பிட்டுள்ள நாளில் பணிவரன்முறை செய்து நியமன ஆணையில் குறிப்பிட்ட நிபந்தனைக்குட்பட்டு ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி திரு. / திருமதி. / செல்வி. | பணிபுரியும்அலுவலகம் / பள்ளி | உதவியாளர்பணியிடத்தில்பணிவரன்முறைப்படுத்தும்நாள். |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | ர.பார்த்திபன்,<br>உதவியாளர். | மாவட்டக் கல்வி அலுவலகம்,<br>சேலம் ஊரகம், சேலம் மாவட்டம். | 25.03.2015<br>முற்பகல் |
| 2. | க.சா.நவீனா,<br>உதவியாளர். | மாவட்டக் கல்விஅலுவலகம்,<br>ஆத்தூர்.<br>சேலம் மாவட்டம் | 23.03.2015<br>முற்பகல் |

மேற்காண் பணியாளர்கள் சார்பாக கல்வித்தகுதிச் சான்றுகள் உண்மைத்தன்மை மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

இந்தப் பணிவரன்முறையானது, பார்வை (4)ல்குறிப்பிட்டுள்ள தேர்வாணையக் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, சென்னை / சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் இந்த நியமனம் சார்ந்து நிலுவையிலுள்ள 2013-14 Group II A Services-ன்கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்கின் தீர்ப்புக்கு உட்பட்டதாகும்

சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவர் இந்தச் செயல்முறைகளை உடனடியாக மேற்படி உரிய நபருக்கு அளிக்க வேண்டும். பணியாளர் வேறு அலுவலகத்திற்கு மாறுதல் செய்யப்பட்டிருப்பின் அவ்வலுவலகத்திற்கு இச்செயல்முறைகளை அனுப்ப வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஓம்./– சு. நாகராஜமுருகன்,
இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).

பெறுநர்: சம்பந்தப்பட்ட பணியாளர் (உரிய அலுவலர் வாயிலாக).
நகல்: சம்பந்தப்பட்ட அலுவலர் / தலைமையாசிரியர்.
நகல்: சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்.

சேலம் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

மூ.மு.எண்.001247/ஆ2/2020 நாள். 29 .05.2020

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி–பள்ளிக்கல்வித்துறை உதவியாளர்–நேரடி நியமனம் 2013–2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட உதவியாளர் திருமதி.க.சா.நவீனா என்பாருக்கு பணிவரன்முறை – ஆணை வெளியிடப்பட்டது–சார்பு

பார்வை: சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ப.மு.எண். 12053/அ4/இ3/2020 நாள். 19.03.2020

-------

பார்வையில் காணும் செயல்முறைகளின் படி சேலம் மாவட்டம், ஆத்தூர் மாவட்டக் கல்வி அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரியும் திருமதி.க.சா.நவீனா என்பாருக்கு உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அன்னாரது பணிவரன்முறை ஆணை நகல் இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காகவும், பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளவும் சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பலாகிறது.

28/05/2020

முதன்மைக் கல்வி அலுவலர்

இணைப்பு. ஆணை நகல்

29/05/2020

சேலம்

பெறுதல்.

சம்பந்தப்பட்ட பணியாளர், (உரிய வழியாக)

நகல்.

மாவட்டக் கல்வி அலுவலர், ஆத்தூர்